இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை (இரண்டாம் அரையாண்டு) - **2006/2007**

**ESP 1108 -** கல்வி முகாமைத்துவம்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

---

திகதி: 01.12.2007 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. "செயற்பாட்டு மட்ட முகாமைத்துவமும் நிருவாகமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களை ஒத்தவையாகும்".

   சுருக்கமாக விமர்சிக்குக.

2. பீட்டர் ட்ரக்கர் (Peter Drucker) இனால் அறிமுகப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கொள்கையின் பிரதான எண்ணக்கரு யாது? இக்கொள்கையின்படி முகாமையாளரின் மூன்று(03) வகிபங்குகளைக் குறிப்பிடுக.

3. முகாமைத்துவச் செயன்முறையிலுள்ள ஒரு கூறின் இரண்டு பிரதான உறுப்புக்கள் இயைபாக்கம், ஊக்கல் என்பனவாகும். இம்முகாமைத்துவச் செயன்முறைக் கூறைச் சுருக்கமாக விளக்குக.

4. 1984ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் முகாமைத்துவச் செயன்முறையைப் பரவலாக்குவது பற்றி எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையொன்றைக் குறிப்பிடுக. இந்நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான காரணங்களைச் சுருக்கமாக விளக்குக.

5. "பாடசாலை அதிபர் ஒருவருக்கு நிதி முகாமைத்துவம் பற்றிய அறிவு அத்தியவசியமானதாகும்".

   இக்கூற்றைச் சுருக்கமாக விமர்சிக்குக.

6. பாடசாலை மேற்பார்வையில் ஈடுபடும் போது வலயக்கல்வி அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவேண்டிய ஐந்து(05) அமிசங்களைக் குறிப்பிடுக.

7. பாடசாலை அதிபர் ஒருவரின் போதனா தலைமைத்துவத்தின் மூன்று(03) பண்புகளைச் சுருக்கமாக விபரிக்குக.

8. 1 AB தரப் பாடசாலையொன்றின் "பாடஇணைப்பாளரின்" வகிபங்கைச் சுருக்கமாக விபரிக்குக.

## பகுதி II

9. பல்வேறு முகாமைத்துவக் கொள்கையாளர்கள் வித்தியாசமான முகாமைத்துவப் போக்குகளில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

(i) இரண்டு வித்தியாசமான முகாமைத்துவப் போக்குகளைப் (Management style) பெயரிடுக.

(ii) ரொபர்ட் பிளெக், ஜேன் மவுட்டன் (Robert Black and Jane Mouton) என்போரால் முன்வைக்கப்பட்ட முகாமைத்துவச் சட்டகத்தை விபரிக்குக.

(iii) இம்முகாமைத்துவச் சட்டகத்தில் பொருத்தமான இடத்தில் உமது பாடசாலை அதிபரை வைத்து அதற்கான காரணங்களைத் தருக.

10. "இலங்கை மிகச் சிறிய நாடாக இருந்தபோதும் அதன் பாடசாலை கல்வி முறைமை மிகவும் சிக்கலானது".

இக்கூற்றை விமர்சிக்குக.

11. பின்வருவனவற்றில் ஏதாவது மூன்று பற்றி சிறு குறிப்புக்கள் எழுதுக.

(i) ஒரு வளமுகாமையாளராக ஆசிரியர்.

(ii) பாடசாலை முகாமைத்துவச் சபை.

(iii) பாடசாலை ஆசிரியரின் ஊக்கல்.

(iv) தரம் ஒன்று பாடசாலை அனுமதியில் முகாமைத்துவப் பிரச்சினைகள்.

(v) இந்தியாவில் பாடசாலைக் கல்வி முறைமையின் மானிட வளங்கள்.

12. ஏற்கனவே எவ்வித முகாமைத்துவப் பயிற்சியும் பெற்றிராக வகை – 3 பாடசாலை அதிபர்கள் 20 பேருக்கு ஒரு மாதகால முகாமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அமைப்பதற்கான செயற்றிட்ட அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறு நீர் வேண்டப்பட்டுள்ளீர் எனக்கொள்க. பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக அறிக்கையொன்றைத் தயாரிக்குக.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள்.

(ஆ) நேரவரையறைகளுடனான உள்ளடக்கச் சுருக்கம்.

(இ) கற்பித்தல் முறைகள்.

(ஈ) கணிப்பீட்டுப் பிரமாணங்கள்

(உ) தேவையான வளங்கள்

13. மெக்ஸ் வெபர் (Max Weber) சிறந்ததொரு ஒழுங்கமைப்புக் கொள்கையாளர்.

(i) அவரின் கொள்கையை இனம் கண்டு அதன் இயல்புகளை விளக்குக.

(ii) பின்வருவன தொடர்பாக வெபரின் நோக்கை ஆராய்க.

(அ) ஒழுங்கமைப்பு (Organization).
(ஆ) வலு (Power).
(இ) அதிகாரவுடைமை (Authority).

14. இலங்கையின் கல்விப் பின்னணியில் பின்வரும் முக்கிய பிரச்சினைகள் ஆரோக்கியமற்ற ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளன.

(அ) சிறிய பாடசாலைகள் தொடர்ந்து நிலைத்திருப்பதற்காகப் போராடுகின்றன.

(ஆ) பெரிய பாடசாலைகள் தேவையை வழங்க இயலாமல் தவிக்கின்றன.

பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு மேற்கூறிய பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்க.

(i) பிரச்சினைகள் பற்றிய விபரம்.
(ii) இந்நிலைமைக்கான காரணங்கள்.
(iii) இந்நிலைமையை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள்.

(பதிப்புரிமை பெற்றது)